30.07.2026 பி.வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 122/2017 ) திரு.ஜேசுமணி.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>–

1) இந்த வழக்கில் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ள பிராது விவரத்தையும் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை விவரத்தையும் படித்துப்பார்த்துள்ளேன் என்றால் சரிதான். வாதி 3 சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பிராதில் 1ம் தபசிலில் 2 அயிட்ட சொத்தாகவும், 2ம்தபசிலில் 1 அயிட்டச்சொத்து காண்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் 1ம்பிரதிவாதி சூசைபிரான்சிஸ் எனது மகன் என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையும் நான் படித்துப்பார்த்துள்ளேன் என்றால் சரிதான். மரியபுஷ்பப்பம் என்பவர் அந்தோணிக்கு எழுதிக்கொடுத்தப்பத்திரமும், அந்தோணிச்சாமி வாதிக்கு எழுதிக்கொடுத்த பத்திரமும் எழுதிக்கொடுத்த சமயத்தில் எனக்கு தெரியும் என்றால் சரிதான் அது மோசடியானபப்பத்திரம். வாதி பெயரில் உள்ள பத்திரத்தையோ, அதற்கு முன்னர் உள்ள நன்கொடைப்பத்திரத்தையோ ஆட்சேபனை செய்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது 1ம்தபசில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.8/29 உள்ள சொத்திற்கு ஆதியில் சவரிமுத்து நாடார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான் தற்போது கணினிப்பட்டாவும்அவரின் பெயரில் தான் உள்ளது. மீண்டும் சாட்சி எனது பெயரில் புத்தக பட்டா இருப்பதாக தன்னிட்சையாக கூறுகிறார். எனது பெயரில் உள்ள புத்தக பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்யலாம் என்றால் தாக்கல் செய்யலாம். எனதுபெயரில் எந்தவித புத்தக பட்டாவும்இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வருவாய் துறையினர் எந்த வகையிலும் சர்வே எண்.8/29 க்கு பட்டா பாஸ்புத்தகம் எதுவும் எனக்கு வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. வருவாய்துறையினரை விசாரித்தால் எனது பெயருக்கு சர்வே எண்.8/29 க்கு பட்டா இருப்பது தெரியவரும் என்றால் எனது பெயரில் கணினி பட்டா,புத்தகப்பட்டாவும் உள்ளது. எனது பெயரில் கணினிப்பட்டா எதுவும் இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ள அ.வ.எண்.230/2013 வழக்கில் இந்த வழக்கின் வாதி ஒருதரப்பினர் இல்லை என்றால் சரிதான்.

2) அ.வ.எண்.230/2013 வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளவர்கள் அனைவரும் எனது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் நான் தான். எனது எதிர்வழக்குரையில் தாவாச்சொத்தான சர்வே எண்.8/29 க்கு 1995 ஆம் ஆண்டு எனது பெயருக்கு பட்டா ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு யாருடைய பெயரில் பட்டா ஏற்பட்டியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரிதான். அ.வ.எண்.230/2013 வழக்கு தாவாச்சொத்தை தவிர்த்து இதர சொத்துக்களை ராஜேந்திரன் வகையறா இடைஞ்சல் செய்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் எனது மகன் இடைஞ்சல் செய்தார். 1995 ஆம்ஆண்டு எனதுபெயருக்கு பட்டா கொடுத்தாக சொல்லுவது வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. ஆதியிலிருந்து சவரிமுத்து நாடார் பெயரில் பட்டா ஏற்பட்டும், அவரது வாரிசுகளிடமிருந்து கிரையம் பெற்றவுடன் வாதி பெயருக்கு பட்டா ஏற்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சர்வே எண்.8/29 க்கு மட்டும் தான் தாவா செய்கிறேன் என்றால் சரிதான். இதர சொத்துக்களைப்பொறுத்து தாவா இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது மகன் 1ம்பிரதிவாதி தாவாச்சொத்தான சர்வே எண்.8/29 ல் ஆதியில் சவரிமுத்து நாடாருக்கு பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு உண்மையில் வருவாய் துறையினர் பட்டா பாஸ்புத்தகம் வழங்கியிருந்தால் இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல வீட்டில் தான் உள்ளது. இந்த வழக்கில் சர்வே எண்.8/29 சொத்து நான் தான் அனுபவித்து வருகிறேன் என்பதற்கு பட்டாவோ, தீர்வை ரசீதோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் சூசைபிரான்சிஸ் ஆன வாதி பெயருக்கு சாகுபடி அடங்கல் செய்திருக்கும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் பணம் கொடுத்து வாங்கியிருப்பார். வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள தீர்வை ரசீதுகள் தாவாச்சொத்து வாதிக்கு பெயருக்கு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதியை எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். வாதி பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா மற்றும் தீர்வை ரசீது சம்பந்தமாக எனது தரப்பில் எந்தவிதமான மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

3) சவரிமுத்துவின் வாரிசுகள் தான் மரியபுஷ்ப்பம் மற்றும் அந்தோணிச்சாமி என்ற விவரம் தெரியும் என்றால் சரியல்ல அவர்கள் இல்லை. வழக்கிற்கிற்காக மேற்சொன்னவர்கள் வாரிசுகள் இல்லை என்று நான் மறைத்து சொல்லிகிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் சவரிமுத்து என்ற ஒரு நபரே இல்லை என்று கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது எதிர்வழக்குரை சங்கதிக்கு முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.8/29 தாவாச்சொத்தான எனக்கு எந்த நிலையிலும் பாத்தியப்பட்ட சொத்தே கிடையாது என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையின்படி 1995 ஆம் ஆண்டு முதன்முறையாக எனக்குபட்டா கொடுத்தார்கள் என்பது எனதுகட்சி என்றால் சரிதான். சர்வே எண்.8/29 எனக்கு பூர்வீகச்சொத்து இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.8/29 மற்றும் அதனுடன் சேர்ந்த 8/23 சொத்தும் ஆதியில் சவரிமுத்து நாடார் என்பவருக்கு பாத்தியப்பட்டு அவர் காலம் சென்ற பின்பு அவரது சகோதரர் மகன் மைக்கேல் நாடாரின் மக்களான மரியபுஷ்ப்பம்,அந்தோணி நாடாருக்கு பாத்தியப்பட்டு மரியபுஷ்ப்பம் அந்தோணிச்சாமிக்கு நன்கொடை ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டு அந்த நன்கொடை ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வந்து மேற்படி அந்தோணிச்சாமி வாதிக்கு தக்க மறுபயனுக்கு கிரையப்பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்து வாதி பெயருக்கு பட்டா ஏற்பட்டு தீர்வை செலுத்தி அதில் வேலி அமைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நானும், எனது மகனான 1 ம்பிரதிவாதியும் சேர்ந்து கொண்டு வழக்கு சொத்தை அனுபவித்து வரும் வாதிக்கு வீணாண இடைஞ்சல்செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. அ.வ.எண்.230/2013 வழக்கில் வாதியோ அவரது முன்பாத்தியஸ்தர்களான உண்மையான உரிமையாளர்களை சேர்க்காமல் நீதிமன்றத்தை ஏமாற்றி தாவாச்சொத்தான சர்வே எண்.8/29 ஐ பொறுத்துபெற்றுள்ள தீர்ப்பு இந்த வாதிகளையோ, முன் பாத்தியஸ்தர்களையோ எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு 1 ம்தபசில் சொத்து வாதிக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டும், 2 ம்தபசில் சொத்து வாதிக்கு பூர்வீகமாகப்பாத்தியப்பட்டு அவரது அனுபவத்திலும், ஆளுகையிலும் இருந்து வருகிறது என்றால்சரியல்ல. அ.வ.எண்.230/2013 வழக்கின் தீர்ப்பானது வேறு சொத்துக்களை மூலாதாரமாக காட்டி தாவாச்சொத்து 8/29 சம்பந்தமான மோசடியான பட்டா பாஸ்புக் ஆவணத்தை கொண்டு மோசடியாக பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாவாச்சொத்தை பொறுத்து

எந்தவித அனுபவமோ, உரிமையோ, அ.வ.எண்.230/2013 வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் எந்தவிதமான உரிமையோ கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு 1ம்தபசில் சொத்து வாதி நல்எண்ணத்தின் அடிப்படையில் நன்கு விசாரித்து தக்க மறுபயனுக்கு உரிய உரிமையாளரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதால் வழக்கு சொத்துக்கள் அவரது அனுபவத்திலும், ஆளுகையிலும் இருந்து வருவதால் வாதி கோரும் விளம்புகை மற்றும் நிரந்தர தடைஉறுத்துக்கட்டளைப் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.230/2013 வழக்கின் தீர்ப்பாணை எனது கைவசம் உள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பாணையை வழக்கில் தாக்கல் செய்யலாம் என்றால் தாக்கல் செய்யலாம். சர்வே எண்.8/29 ஐ பொறுத்து வருவாய் துறையினரை விசாரிப்பதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். வழக்கிற்காக உண்மை விவரங்களை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றல் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
30.07.2026.